
KALAIAGAM (FOLK ART CLUB)


# கலையகம் 2019 – 2020

[தமிழர் கலை பயிற்றுக் களம்]




**‘தமிழர் கலை பயிற்று விழா - 2019’**

அழைப்பிதழ்




**‘தமிழர் கலை பயிற்று விழா - 2019’**

.

**வா**ழ்வியலில் கலையின் பங்கு அதிகம். அதனை வெளிப்படுத்தும் இந்நிகழ்விற்குச் சிறப்பு விருந்தினராக **திரைப்பட இயக்குநர் திரு மு.களஞ்சியம்** அவர்கள் கலந்து கொண்டு மிக அழகான உரையை நிகழ்த்தி மாணவர்களையும் மற்றும் அரங்கத்தில் உள்ள அனைவரையும் உற்சாகப்படுத்தினார். அவரின் பேச்சு புதிய ஊக்கத்தையும் உத்வேகத்தையும் மாணவர்களுக்கு அளித்தது. மாணாக்கர்கள் **கிராமிய நடனத்தினையும் தெருக்கூத்தினையும் பறையிசையோடு** சேர்ந்த **சிலம்பத்தினையும்** காட்சிப்படுத்தி தங்கள் திறமைகளை வெளிப்படுத்தியது அரங்கத்தில் உள்ள அனைவரையும் கவர்ந்தது.



சிறப்பு விருந்தினராக குத்து விளக்கேற்றும் திரைப்பட இயக்குநர் திரு மு.களஞ்சியம் அவர்கள், கல்லூரி கல்வி இயக்குநர் முனைவர் பாத்திமா வசந்த் அவர்கள்



**கலையக நிகழ்வில் குத்துவிளக்கேற்றும் கலையக மாணவ தலைவர் ர.டில்லிபாபு மற்றும் துணைத் தலைவர் பூ.ரூபேஸ் குமார்.**




**திரைப்பட இயக்குநர் திரு மு.களஞ்சியம் அவர்களுடன்**

**கலையக ஒருங்கிணைப்பாளர்கள் உதவிப்பேராசிரியர் முனைவர் இரா.சத்தியப் பிரியா**

**மற்றும் உதவிப்பேராசிரியர் ஆ. மேரிஜூலி.**




**திரு மு.களஞ்சியம் அவர்கள் மாணவர்களுக்கு உரைநிகழ்த்துதல்.**



**”நாட்டுப்புற நடனம்”** ஆடும் மாணவிகள்.



**“வீதி நாடகம்” நிகழ்த்தும் மாணவர்கள்.**



“பறையிசை”மற்றும்“சிலம்பம்” சுழற்றும் மாணவர்கள்




**பறையிசை, வீதி நாடகத்தைக் கண்டுகளிக்கும் மாணவ மாணவிகள்.**



**திரு மு.களஞ்சியம்** அவர்களுடன் கல்லூரி கல்வி இயக்குநர் **முனைவர் பாத்திமா வசந்த்**,

துணை முதல்வர் **முனைவர் கீதா ரூபஸ்** மற்றும் **கலையகக் குழுவினர்.**

**தேநீர் இடைவேளை நிகழ்வு**
**'வில்லுப்பாட்டு'**

**கல்வித் தந்தை காமராசரின்** பிறந்த தினமான **ஜூலை 15** ஆம் நாளை **கல்வி வளர்ச்சி நாளாகத்** தமிழக அரசு கொண்டாடி வருகிறது. அதனடிப்படையில் 16.07.2019 முற்பகல் 11.00 மணிக்கு நமது கல்லூரித் திறந்தவெளி கலையரங்கில், கல்வியின் இன்றியமையாமை குறித்த விழிப்புணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்தும் விதமாக **'வில்லுப்பாட்டு'** நிகழ்ச்சி கலையகம் சார்பில் நடைபெற்றது. வில்லுப்பாட்டினை மாணாக்கர் அனைவரும் கண்டுகளித்து காமராசரின் ஆளுமைகளையும் கல்வியின் இன்றியமையாமையையும் அறிந்து கொண்டு பயனடைந்தனர்.



**"வில்லுப்பாட்டு" நிகழ்த்தும் மாணவர்கள்**

**பெட்ரிசியன் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக் கலையகம் மற்றும்**

**மற்றும்**

**சென்டினியல் மடிப்பாக்கம்“லயன்ஸ் கிளப்”**

**இணைந்து நடத்தும்**

**“விழிப்புணர்வு கலை நிகழ்வு 2019”**

**பெ**ட்ரிசியன் கல்லூரிக் கலையக மாணவர்கள் சென்டினியல் மடிப்பாக்கம் லயன்ஸ் கிளப்புடன் இணைந்து **மடிப்பாக்கம் பேருந்து நிலையம்** அருகில் 9.10.2019 அன்று காலை 09.00 மணியளவில் கலையகம் சார்பாக ”**விழிப்புணர்வு கலை நிகழ்வு 2019**” என்னும் தலைப்பின் கீழ் கலை நிகழ்வை நிகழ்த்தினர். இந்நிகழ்வில் **தண்ணீர்சேமிப்பு**, **புற்றுநோய்**, **சாலைப்பாதுகாப்பு** ஆகியவை குறித்த **விழிப்புணர்வை** ஏற்படுத்தும் வகையில் **பறையிசை**, **வீதிநாடகம்**, **சிலம்பாட்டம்** ஆகியவற்றை நிகழ்த்தி மடிப்பாக்கம் வாழ் மக்களுக்குக் கலைகளையும் கலைகளின் வழியாக விழிப்புணர்வு கருத்துக்களையும் வெளிப்படுத்தினர். மேலும் விழிப்புணர்வு வாசகங்களை கருத்துரைகளை **விளக்கப்படங்களில்** (chart) எழுதி, வரைந்து **பதாகைகளைக்** கையில் ஏந்தி நின்றனர். அதனைக் கண்டுகளித்து மக்கள் பயனுற்றனர்.

**இ**ந்நிகழ்வைத் தொடர்ந்து **மடிப்பாக்க நீர்வளத்தைக்** காக்க சென்டினியல் மடிப்பாக்க லயன்ஸ் கிளப்புடன் **கலையக மாணவர்களும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களும்** இணைந்து மடிப்பாக்கம் **கார்த்திகேயபுரம் ஏரிக்கரையில் பனை விதைகளை ஊன்றியும் மரக்கன்றுகளை நட்டும்** மடிப்பாக்க நீர்நிலையினை உயர்த்தப் பெரும்பங்காற்றினர். இந்நிகழ்வு அப்பகுதி மக்களுக்கு புது உத்வேகத்தை ஏற்படுத்தியதால் மாணவர்களும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களும் புத்துணர்ச்சி பெற்றனர்.


LIONS CLUB
CHENNAI CENTENNIAL MADIPAKKAM DIST.324-A6
செண்டினியல் மடிப்பாக்கம் லயன்ஸ் சங்கம்
மற்றும்
பெட்ரிசியன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கலையகம்
இணைந்து நடத்தும்
"விழிப்புணர்வு கலை நிகழ்வு 2019"
நாள் : 9.10.2019 புதன் இடம் : மடிப்பாக்கம் பேருந்து நிலையம்
சிறப்பு விருந்தினர்கள் :
MJF.Ln.S.சிவக்குமார்
மாவட்ட ஆளுநர்
Ln.T.ராஜபாண்டியன்
Ist VDG
Ln.R.ஸ்ரீதரன்
Ist VDG
Ln.P.ஜெயக்கொடி (CS)
Ln.S.V.ரமேஷ் (CT)
Ln.P.மணிசேகர் (CJS)
Ln.T.R.ராஜன்
Region Chairperson
Ln.B.வேணுகோபால்
Zone Chairperson
அனைவரும் வருக!
M.ராஜராஜன்
தலைவர்
V.நந்தகோபால்
செயலாளர்
C.லட்சுமி நாராயணன்
பொருளாளர்
DIST. 324 A6
THIRUVALLUVAR
INDIA
2019-2020
SERVE WITH KINDNESS


LIONS CLUB
MADIPAKKAM
SOCIAL SERVICE
DIST. 324-A6
செண்டினியல் மடிப்பாக்கம் லயன்ஸ் சங்கம்
மற்றும்
பெட்ரிசியன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள்
இணைந்து நடத்தும்
"மரக்கன்று நடும் விழா"
நாள் : 9.10.2019 புதன் இடம் : மடிப்பாக்கம் ஐயப்பாநகர் ஏரிக்கரை.
சிறப்பு விருந்தினர்கள் :
MJF.Ln.S.சிவக்குமார்
மாவட்ட ஆளுநர்
Ln.T.ராஜபாண்டியன்
Ist VDG
Ln.R.ஸ்ரீதரன்
Ist VDG
Ln.P.ஜெயக்கொடி (CS)
Ln.S.V.ரமேஷ் (CT)
Ln.P.மணிசேகர் (CJS)
Ln.T.R.ராஜன்
Region Chairperson
Ln.B.வேணுகோபால்
Zone Chairperson
அனைவரும் வருக!
M.ராஜராஜன்
V.நந்தகோபால்
செயலாளர்
C.லட்சுமி நாராயணன்
பொருளாளர்

**நிகழ்ச்சி பதாகைகள்.**


சைவ உணவகம்
FREE




**“வீதி நாடகம்”நிகழ்த்திய கலையகம் மாணவர்கள் விருந்தினர்களோடு எடுத்துக் கொண்ட குழுப் புகைப்படம்.**


LIONS
MADIPAKKAM
SOCIAL SERVICE
DIST. 324-A6



**'பறையிசை' நிகழ்த்தும் கலையகம் மாணவர்கள்**




**மரக்கன்று நடுவதை ஊக்கப்படுத்த பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார்கள் கலையகம் மற்றும் நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள்**




**பதாகைகளின் வாயிலாக விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.**




**“சிலம்பம் சுழற்றும்”கலையகம் மாணவர்கள்**